# மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் போவத்த பங்களா முதியோர் இல்லத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மேலாண்மை உதவி தொழில்நுட்பமற்ற தொகுதி 2 சேவைப் பிரிவின் பணிப்பெண் பதவித் தரம் III இற்காகத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் (திறந்த முறை)

மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் போவத்த பங்களா முதியோர் இல்லத்திற்காகப் பணிப்பெண் பதவிக்கு நியமிக்கப்படுவதற்காகத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி 2026.10.02 ஆகும்.

02. மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2021.04.07 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் போவத்த பங்களா முதியோர் இல்லத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மேலாண்மை உதவி தொழில்நுட்பமற்ற - தொகுதி 2 சேவைப் பிரிவின் பணிப்பெண் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மற்றும் பதவி உயர்த்துவதற்கான திட்டத்தின் 7.2.2 ஆம் பிரிவின் விதந்துகாப்புகளுக்கு அமைவாக 2026.01.27 ஆம் திகதியன்று 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

03. 02 **பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன் இப்பதவியானது நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய உரிமையுடையது. அரச நிருவாக சுற்றறிக்கை** 10/2025
**இற்குஅமைவாகஇப்பதவிக்குரியசம்பளக்குறியீடுமற்றும்சம்பளத் திட்டம் பின்வருமாறு அமையும்**:
MN 01 – 2025, 45230 – 10 X 540 – 11 X 630 – 10 X 890 – 10 X 1190 – 78360.00

(i) கல்வித் தகுதிகள் - சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு (02) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில்

Gazette.lk

சித்தியடைந்திருத்தல்.
மற்றும்
கல்விப்பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (01) பாடத்திலாவது (பொதுச் சாதாரண பரீட்சை மற்றும் சாதாரணஆங்கிலம்தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

(ii) தொழில்சார் தகுதிகள் - இலங்கை சமூக சேவை கல்லூரி, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட துறை சார்ந்த, அதாவது பணிப்பெண் சேவை தொடர்பான ஓராண்டுப் பாடநெறியைப் பயின்றிருத்தல்.

(iii) அனுபவம் - பதவிக்குரிய துறையிலான அனுபவம் சிறப்புத் தகுதியாகக் கருதப்படும்.

(iv) உடற்தகுதி - ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்திற்குள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் மனவியல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(v) ஏனையவை -

i. இலங்கைப்பிரிஜையாகஇருத்தல்வேண்டும்.
ii. விண்ணப்பதாரிகள்நற்பண்புஉடையவராகஇருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பங்கள்கோரப்படும்முடிவுத்திகதிக்குஉடனடியாகமுந்தைய3ஆண்டுகள்காலத்தில்மத்தியமாகாண சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட பிரஜையாக இருத்தல் வேண்டும்.
iv. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தேவையான அனைத்துத் தகுதிகளும், அத்தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
v. பெண் விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

Gazette.lk

03. ஆட்சேர்க்கும் முறை -

(i) அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு,

a. ஆப்டிடியூட் சோதனை (திறனறிப் பரீட்சை) மற்றும் பொது அறிவு

b. பணிப்பெண் சேவை பற்றிய அறிவு

ஆகிய பாடங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும். சித்தியடைவதற்கு ஒரு பாடத்திற்கு குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெற வேண்டும்.

(ii) எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போல் இருமடங்கானோர் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சை ஆகிய இரண்டிலும் பெறப்பட்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையிலானோர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டுத் தகுதிகள் பரிசீலிக்கப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(iii) தொழில்சார் பரீட்சை - பதவிக்குரிய தொழில்நுட்பக் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பான ஆற்றலைப் பரிசோதிப்பதற்காக 01 மணித்தியால காலத்தில் அரச அல்லது தனியார் முதியோர் இல்லமொன்றில் வழங்கப்படும் செய்முறைச் செயற்பாட்டிற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது செயலாளரால் அதிகாரம் அளிக்கப்பட்ட நிறுவனம் அல்லது நபரினால் நியமிக்கப்படும் பரீட்சைப் சபையினால் புள்ளிகள் வழங்கப்படும். சித்திப் புள்ளி 40 ஆகும்.

(iv) விண்ணப்பங்கள் கோரும் முறை - விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மாதிரிக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2026.10.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், த.பெ. எண் 121, மத்திய மாகாண சுகாதார அமைச்சு, சங்கராஜ மாவத்தை, கண்டி எனும் முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் மேல் இடது மூலையில்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

"போவத்த பங்களா முதியோர் இல்லத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மேலாண்மை உதவி தொழில்நுட்பமற்ற தொகுதி 2 சேவைப் பிரிவின் பணிப்பெண் III ஆம் தரத்திற்குத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

திகதி 2026.09.11

ஜெகத் அதிகாரி

செயலாளர்

சுகாதார, சுதேசிய வைத்திய, சமூக நலன்புரி,

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அமைச்சு

மத்திய மாகாணம்

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED